கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
24-12-1972
30 காசு




ஆஹா!
என்ன இனிமை,
என்ன சுவை!
பல வண்ண
காட்பரிஸ்
மில்க் சாக்கலேட்
ஜெம்ஸ்
GEMS
ஆட்டமும்
பாட்டும்
களிப்பூட்டுமே,
காட்பரிஸ்
ஜெம்ஸ்
இனிப்பூட்டுமே!
ரூ.1
மட்டுமே
AIYARS-C.165 TM



கோகுலம்


டிசம்பர் 24, 1972

★

சந்தா விவரம்:

தனிப் பிரதி
விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
வெளிநாடுகள் ரூ. 18-00



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

மலர் 1 — இதழ் 18
பரிதாபி ௵
மார்கழி 10

★

அட்டைப்படக் கழுதைக் குட்டி: எனக்குக் குரல் வளம் இல்லேன்னாலும் நல்ல கேள்வி ஞானம் உண்டுங்க!

வண்ணப்படம்:
ஜி. ராமமூர்த்தி



நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி!



போட்டி முடிவு தேதி
டிசம்பர் 31, 1972



உங்கள் டீலரிடமிருந்து போட்டித்தாளை இன்றே வாங்குங்கள்!

வயதுக்கேற்ப,
மூன்று குழுக்கள்:
'ஏ' 8 வயதுக்குள்
'பி' 8லிருந்து 10 வயதுக்குள்
'சி' 11லிருந்து 14 வயதுக்குள்

முதற் பரிசுகள்-3
ஒவ்வொன்றுக்கும் ரூ. 50/- ரொக்கம் + கைக்கடிகாரம் + பாக்கெட் டிரான்ஸிஸ்டர்
இரண்டாம் பரிசுகள்-9
கைக்கடிகாரங்கள்
மூன்றாம் பரிசுகள்-99
பாக்கெட் டிரான்ஸிஸ்டர்கள்
மற்றும் 333 சிறப்புப் பரிசுகள்

மிகவும் சுலபம்!

எவ்வாறு பங்கு கொள்வது: உங்கள் நியூட்ரின் டீலரிடமிருந்து போட்டித்தாளை வாங்கி, சித்திரத்தை வண்ண ஓவியமாக்கி மகிழுங்கள். ரூபாய் 1 விலையுள்ள நியூட்ரின் மிட்டாய்ப் பாக்கெட்டிலுள்ள நியூட்ரின் முயலாரின் ஸ்டாம்பை போட்டித் தாளில் ஒட்டி, உங்களைப்பற்றிய விவரங்களைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.


"நியூட்ரின் வண்ணம் தீட்டும் போட்டி"
C/o. நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோடு, சித்தூர் (ஆ.பி.)

பரிசுக்குரிய ஓவியங்கள், சிறந்த ஓவியர்களின் குழுவால் தேர்ந்தெடுக்கப்படும்.

இன்றே வண்ண ஓவியம் தீட்டுங்கள்—
நீங்களே பரிசைப் பெறுபவராகலாம்!

NCM-39A/72 TAM

ஆத்திசூடி  ராஜாஜி



நிலையின் பிரியேல்

நிலையினின்று பிரியேல்.

நிலை — மன நிலை.

துக்கம் வந்தால் பொறுப்பதும் இன்பம் அநுபவிக்கும் காலத்தில் அறிவிழக்காமல் அளவுக்குள் நிற்பதும் நிலையில் நிற்பதாகும். இதை மறப்பது நிலையினின்று பிரிவதாகும். இது கூடாது.

நீர் விளையாடேல்

நீரைக் கொண்டு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதன்றி வெறும் விளையாட்டாகக் கிணறுகளிலும் ஆறுகளிலும் விளையாடுவது கூடாது. சிறு கிணறுகளில் இப்படிச் செய்வது தனக்கும் தண்ணீரை உபயோகப்படுத்தும் பிறருக்கும் அதனால் துன்பம் உண்டாகும். இதனால் நீந்தல் கூடாது என்றல்ல. நீந்தக் கற்க வேண்டும். நீந்திச் செய்ய வேண்டிய தொழில்களும் செய்யத் தகுந்தவையே. வெறும் விளையாட்டை அளவுக்குள் நிறுத்த வேண்டும் என்கிறார். பெரு வெள்ளத்தில் விளையாட்டாகப் புகுவது அபாயம்.

நுண்மை நுகரேல்

நுண்மை — சிற்றுண்டிகளை

நுகரேல் — அடிக்கடி தின்ன வேண்டாம்.

போஜன காலங்களுக்கு இடையில் சிற்றுண்டி தின்பது தேகத்துக்கு ஆகாது, நோயுண்டாகும். நுண்மை என்றால் சிறிய உருவம். நுகரேல் என்றதனால் சிற்றுண்டிகள் என்று பொருள் தந்தது.

நூல் பல கல்

பல நூல்களைப் படித்துக் கற்றுக்கொள். கல்வி கற்பது கடமை. ஏதோ ஒன்று கற்றுக் கொண்டால் போதாது. பல நூல்கள் கற்றால்தான் உண்மையான அறிவு உண்டாகும்.



தேனுக வதம்

கோகுலப் பிருந்தாவனத்தில், கோபால கிருஷ்ணரும், பலதேவரும் பரம சுகமாக வசித்து வந்தார்கள். கோபாலர்களின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பசுக் குலங்களைக் கானகத்தில் மேய்த்து வரலானார்கள்.

கண்ணபிரான் அப்பசுக்களுக்குப் பலப்பல வண்ணப் பேரிட்டு அழைப்பார். ''ஏ கங்கா பவானி! கௌதமீ! பாகீரதி! மந்தாகி! பார்வதி! மகாலட்சுமி! இந்திராணி! கோரத்னமே! சுபாங்கி'' என்று அழகிய பெயர்களை இட்டு அழைப்பார். அப்பசுக்கள் துள்ளி வந்து பகவானைச் சூழ்ந்து நிற்கும். வேதங்களுக்கும் எட்டாத அவருடைய பாதங்களை நாவினால் வருடும். அவருடைய தாமரை போன்ற திருமுகத்தை நோக்கி மகிழும். அவருடைய திருமேனியில் தம் உடம்புகளைத் தேய்க்கும். அக் கோகுலங்கள் என்ன மாதவம் செய்தனவோ? தேவருக்கும் எட்டாத தேவனிடம் பழகும் பேறு பெற்றன.

பலராமரும் பரந்தாமனும் அவ்வனத்தில் மயில்கள் ஆடுவதைக் கண்டு தாமும் அதுபோல் நடனம் புரிவார்கள். குயில்கள் கூவுவதைக் கண்டு தாமும் இனிது கூவுவார்கள். அந்தந்தப் பறவைகளைப் போல் ஒலித்து உடன் இருக்கும் கோபால குமாரர்களை மகிழுமாறு செய்வார்கள்.

பகவான் தன் மூத்த நம்பியாகிய பலராமரைப் பார்த்து, ''அண்ணா! இந்த வனம் தங்கள் கருணையால் செழித்து வளமையுடன் விளங்குகிறது. தங்கள் புகழ் நீண்டிருப்பது போல் இம்மரங்கள் வானளாவி நீண்டிருக்கின்றன. அடியார்கள் தங்களைச் சிக்கெனப் பற்றுவது போல் இக்கொடிகள் இம் மரங்களைப் பற்றிக் கொண்டிருக்கின்றன. இதோ பாருங்கள். இந்தப் பூ மரங்கள் தங்கள் பாத மலரில் சீத மலர்களை உதிர்த்து அர்ச்சிக்கின்றன. தாங்கள் தருமத்தின் வடிவம். அன்புக்கு உறைவிடம். வீரத்தின் சிகரம். தங்கள் பெருமை அளவிடற் கரியது'' என்று துதி செய்தார்.



கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்தவாரியார்

பலதேவர், ''தம்பி! எல்லாம் ஈசன் கருணை. எனக்குக் களைப்பாக இருக்கிறது. சற்றுத் தூங்க வேண்டும்'' என்றார். ஒரு மரத்தடியில் கண்ணபிரான் நீலக் குன்று போல் அமர்ந்தார். ''அண்ணா! என் மடியில் தலையை வைத்துப் பள்ளி கொள்ளும்'' என்றார். நீல மலையில் படுத்து, புஷ்பராகம் உறங்குவதுபோல் தம்பி மடியில் தலை வைத்துப் பலராமர் அயர்ந்து கண் துயின்றார்.

கண்ணபிரான் அண்ணனுடைய பாத மலர்களைத் தமது கரமலர்களால் வருடினார். பசுந்தழையால் அவருடைய திருமேனியில் துளிக்கும் வியர்வைகள் மாற விசிறினார். இவ்வாறு பலதேவருக்குப் பகவான் பல பணிவிடைகள் புரிந்தார்.

கோபால குமாரர்களைப் பார்த்துக் கோபால கிருஷ்ணன், ''தோழர்களே! இந்தத் திசையிலிருந்து சுகந்தமான நறுமணம் வீசுகின்றதே? அது என்ன வாசனை?'' என்று வினவினார்.

''கிருஷ்ணா! அங்கே பனங்காடு நிறைந்துள்ளது. ஏராளமான பனம் பழங்கள் பழுக்கின்றன. அதிமதுரமானவை. அங்கே அரக்கர்கள் கழுதை உருவமாக உலாவுகின்றனர். அங்கே போனவர்கள் எமபுரம் போவார்கள். இனிமையான பழங்கள் யாருக்கும் பயன்படாமல், உலோபியின் செல்வம் போல் பாழாகின்றன'' என்றார்கள்.

பலதேவர், ''தம்பி! நாம் சென்று அசுரர்களை அழித்துப் பழுக்கும் பனம் பழங்களைத் தினம் இந்த அன்பர்களுக்கு வழங்க வேண்டும், புறப்படு!'' என்றார். பலதேவர் முன்னே சென்றார். பின்னால் கிருஷ்ணரும், ஆய்ச்சியர்களும் தொடர்ந்தார்கள்.

பலபத்திரர் பனங்காட்டையடைந்து பழுத்துக் குலுங்குகின்ற ஒரு பனை மரத்தை அசைத்துப் பழங்களை உதிர்த்தார். சுவை மிகுந்த அப்பழங்களை எடுத்துக் கோபாலச் சிறுவர்கள் உண்டு உவந்தார்கள்.

தேனுகாசுரன் என்பவன் மலை போன்ற கழுதை உருவுடன் அந்தகனும் அஞ்சுமாறு, நிலம் அதிர, நட்சத்திரங்கள் உதிர, சூறாவளி வேகத்தில் வந்தான். அவனுடைய மூக்கிலிருந்து விஷாக்கினி வெளிப்பட்டது. அதன் காதுகள் அசைவதால் மரங்கள் வேருடன் வீழ்ந்தன.

ஓடி வந்து பலராமருடைய மார்பில் உதைத்தான். பலதேவர் அத்தேனுகனுடைய கழுதையுடன் கடும் போர் புரிந்தார். கோபால குமாரர்கள் அஞ்சினார்கள்.

தேனுகாசுரன் பல முறை பலராமரை எதிர்த்துக் கால்களால் உதைத்தான். அவர் அதனை ஆயாசம் இன்றி உதறித் தள்ளினார். வஜ்ராயுதம் போன்ற தமது கரங்களால் அக்கழுதையின் கால்களைப் பிடித்துச் சுழற்றினார். அக்காடெல்லாம் உதிரம் சிந்த, ஓங்கி ஒரு மரத்தில் அறைந்து வதைத்தார். தேனுகாசுரன் மாய்ந்தான்.

தேனுகாசுரனுடைய உறவினர்களாகிய பல அசுரர்கள் - கழுதை உருவில் திரிகின்ற அக்கொடியவர்கள் - திரண்டு வந்தார்கள். அத்தனை பேரையும் பலராமர் பிடித்து அடித்து முடித்தார்.

அந்த வனம் அசுர பயம் தீர்ந்தது. இந்த அற்புதத்தைக் கண்ட ஆயர்கள், நேயமுடன் பலராமரைப் பணிந்து அவருடைய பராக்கிரமத்தைப் பாராட்டினார்கள். பனம்பழங்களை உண்டார்கள். ஆனந்தம் கொண்டார்கள். அப்போது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பொழுது போனவுடன் எல்லோரும் பிருந்தாவனத்தை அடைந்தார்கள்.

கோபிகையர்கள் இவர்களை வரவேற்று இன்னுரை கூறி, உணவு தந்து உபசரித்தார்கள். (தொடரும்)



இருமலர்களின் கதை

வானத்திலே ஓர் அதிசய நட்சத்திரம் தோன்றியது. அறிவாளிகள், அதன் தோற்றம் குறித்துப் பலவிதமாகக் கூறலானார்கள். உலகை உய்விக்க ஒரு ஜீவன் உதயமாகப் போகிறது என்று நம்பினார்கள் மூன்று பேரரசர்கள். அந்த ஒப்பற்ற விண்மீன் 'அந்தத் தேவதூதன் அவதரிக்கும் இடத்துக்கு அழைத்துப் போகிறேன். என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்' என்று அம்மூவரின் கனவிலே தோன்றிக் கூறியது. உலகத்தில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்காகப் பிறக்கப் போகும் குழந்தைக்குக் காணிக்கையாக மிக உயர்ந்த பரிசுகளுடன் அம்மூவரும் தேவகுமாரனைத் தரிசிக்கக் கிளம்பினார்கள், ஒட்டகங்களில். ஒளி சிந்தும் விண்மீன் வழி காட்டிக் கொண்டு போயிற்று. பெத்லஹேம் நகருக்கு மேலே வந்து ஒளி சிந்தி நின்றது, அந்த ஒற்றைத் தனி விண்மீன்.



கன்னித் தாயான அன்னை மேரிக்கு மாட்டுத் தொழுவத்தில் ஒரு மாசற்ற ஜீவன் மகனாகப் பிறந்தது. பிறந்த குழந்தையைச் சுற்றிலும் ஓர் ஒளிப் பிழம்பு. கூட இருந்த ஆட்டிடையர்கள் அதிசயித்தார்கள். அவர்களிடையே **மாடலின்** என்றொரு மங்கை. தூய இதயம் கொண்டவள். பிறந்த குழந்தைக்கு ஒவ்வொருவரும் ஏதேதோ அருமைப் பொருள்களைப் பரிசாகக் கொண்டு போய்க் கொடுத்தார்கள். மூன்று பேரரசர்கள் இதற்காகவே பல காவதங்கள் பிரயாணம் செய்து வந்திருந்தார்கள். மழலையின் முன்னே மண்டியிட்டுத் தாங்கள் கொண்டு வந்திருந்த உயர்ந்த பரிசுகளைக் குழந்தையின் முன்வைத்து நின்றார்கள். 'இப்படி ஒவ்வொருவரும் அந்தக் குழந்தைக்கு அன்பும் ஆசையுமாக எதையாவது தருகிறார்கள். நானோ? ஆசை இருக்கிறது, அன்பு இருக்கிறது. ஆனால் கொடுப்பதற்கு ஏதுமில்லையே என்னிடம்!' என்று ஏங்கித் தவித்தாள் மாடலின். அப்போது அவள் முன்னால் ஒரு தேவ தூதன் தோன்றினான். அந்த நல்ல உள்ளத்தின் ஏக்கத்தை அறிந்தவனே போல், ''**மங்கையே! மனம் வருந்தாதே. தேவ குமாரனுக்கு நீயும் ஒரு சிறந்த பரிசைத் தரலாம்.** என்னுடன் வா'' என்று தொழுவத்தின் பின்புறத்தே இருந்த புல் வெளிக்கு அழைத்துப் போனான். அங்கே அவள் முன்னே திடீரென்று ஒரு செடி தோன்றிப் பூத்துக் குலுங்கியது. அவளது வெள்ளை இதயத்தைப் போலவே அந்த மலரின் இதழ்களும் வெள்ளை. மலரின் இதயத்திலே மணக்கும் மகரந்தம் மஞ்சளாக. தலையாட்டிச் சிரித்துக் கொண்டிருந்த அந்த மலர்களைக் கொத்தாகப் பறித்துக் கொண்டு குழந்தையைக் காண, அதற்குத் தனது பரிசாக அப்பூக்களைக் கொடுக்க உள்ளே ஓடினாள் மாடலின். மகிழ்ச்சியில் மலர்ந்த உள்ளம், கையிலே மலர்ந்த மலர்கள். வைக்கோல், மெத்தையிலே தவழ்ந்த குழந்தையின் பிஞ்சுக் கரம் அந்தப் பரிசை ஏற்பதே போல் மாடலின் பக்கம் நீண்டது. இதைவிட ஆனந்தம் வேறு உண்டா? மாடலின் மகிழ்ந்து போனாள்.

மாட்டுத் தொழுவத்திலே பிறந்த அந்தக் குழந்தைதான் இயேசுபிரான் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் மாடலின் என்ற மடந்தை பரிசாகக் கொடுத்த மலர் எது என்று தெரியுமா? அதுதான் **கிறிஸ்துமஸ் ரோஜா**

என்று மேல் நாட்டினரால் அழைக்கப்படும் அழகிய மலர். கிறிஸ்துமஸின் போதுதான் இவை ஏராளமாக மலர்கின்றன. இயேசுபிரான் கை நீட்டி ஏற்றுக் கொண்ட பெருமை இந்த மலருக்கு உண்டு.

இயேசுபிரான் பிறந்ததும் அவருக்கு மெத்தையாகும் ஏற்றம் பெற்ற இன்னொரு மலரின் கதை தெரியுமா உங்களுக்கு?

மாட்டுத் தொழுவத்தில் குழந்தை யேசு பிறந்தபோது அன்னை மேரிக்குத் தம் சிசுவைக் கிடத்த நல்ல படுக்கை இல்லை. ஏழ்மையும், எளிமையும் நிறைந்த சூழலில் பிறந்த குழந்தைக்குத் தொட்டில் எங்கிருந்து கிடைக்கும்? ஆனாலும் அன்னை உள்ளம் வேதனைப் பட்டது. தமது அருமைக் குழந்தையின் பட்டுடலை வைக்கோல் உறுத்துமே என்று தவித்தாள். அதனால் குழந்தை அயர்ந்து தூங்காதோ என்று கவலைப் பட்டாள். வைக்கோல் படுக்கையை மிருதுவாக்கவும், குழந்தையின் தலைக்கு உயரமாக வைக்கவும் மிருதுவாக ஏதாவது கிடைக்காதா என்று தொழுவத்தைச் சுற்றிப் பார்வையை ஓட விட்டாள் அன்னை.

மாட்டுத் தொழுவத்துக்கு வெளியே வெள்ளை வெளேர் என்று பூத்துக் குலுங்கி நின்றது ஒரு செடி. அவை தான் **'டெய்ஸி'** எனப்படும் மலர்கள். தொழுவத்தின் கதவருகே வந்து நின்று அவைகளைப் பார்த்த அன்னை மேரியிடம் அந்த மலர்கள் நாணத்துடன் கூறின: ''அன்னையே! எங்களைப் பறித்து உன் குழந்தையின் வைக்கோல் படுக்கையின் மீது பரப்பு. தலைக்கு உயரமாகத் தலையணையாகவும் எங்களை வைப்பாயாக. மிருதுவான எங்கள் இதழ்கள் உன் அருமைக் குழந்தையின் உடலைத் துன்புறுத்தாது.''

மலர்களின் வேண்டுகோளைக் கேட்ட அன்னை மேரி சிரித்துக் கிடந்த அந்தச் சிங்கார மலர்களை நிறையப் பறித்துக் கொண்டு போய் வைக்கோல் படுக்கையின் மீது பரப்பினாள். தலைப் பக்கமும் உயரமாக அந்த 'டெய்ஸி' மலர்களைக் குவித்து வைத்தாள். அந்த இதமான மிருதுவான மலர்ப்படுக்கையில் குழந்தை யேசு இனிமையாகப் புன்முறுவல் பூத்தபடி தூங்கலானார்.



அன்னை தம் தேவ குமாரனோடு அந்த இடத்தை விட்டுக் கிளம்பும்போது தொழுவத்தை ஒட்டி வாயிற்படியருகே செழித்து வளர்ந்துள்ள மலர்களின் அருகே நின்றாள். மகனை அணைத்த படி அந்த மலர்களின் மேலாகக் குனிந்தாள். தன் அன்பு மகனுக்கு அம்மலர்களைக் காட்டி, ''மகனே! இந்தத் தூய்மையான மலர்கள்தான் நீ துன்பமில்லாமல் தூங்குவதற்குத் தங்களை உனக்குப் படுக்கையாக்கின. பொன் உள்ளம் படைத்த பொன் மலர்கள் இவை'' என்று அறிமுகப்படுத்தினாள்.

அன்னையின் பாராட்டைக் கேட்ட வெள்ளை மலர் இதழ்களின் நுனி வெட்கத்தினால் சிவந்தது. குழந்தை ஏசு தம் பிஞ்சு விரல்களால் அம்மலர்களைத் தொட்டார். அவர் தொட்ட இடம் மலரின் நடுப் பாகமாக இருந்தது. உடனே இதழ்களின் இதயமாகிய அந்த நடுப் பாகம் தங்க நிறமாக மாறியது.

இன்றைக்கும் நீங்கள் **'டெய்ஸி'** என்ற அந்த மலரைக் கண்டால் அதன் இதழ்களின் நுனியில் இளஞ் சிவப்பாகவும், நடுவிலே பொன்னை உருக்கி வார்த்தது போன்ற மஞ்சளாகத் திண்டு போல் இருப்பதையும் காணலாம். உடனே உங்களுக்கு இந்தக் கதைகள் நினைவுக்கு வரும். இன்றே **'டெய்ஸி'** மலரைத் தேடிப் போய்ப் பாருங்கள்.

— **விகேயெம்**



ஐயோ..எமன்!

'பாபு'

மூற்றும் துறந்த ஞானி ஒருவர், காட்டில் திரிந்து வந்தார். ஒரு சமயம் மலைக் குகை ஒன்றில் ஏராளமான தங்கக் காசுகள் இருப்பதைக் கண்டு, ''ஐயோ எமன்.....! எமன்!'' என்று கூவிக் கொண்டு ஓட்டம் பிடித்தார். மூன்று திருடர்கள் பயந்து ஓடி வரும் ஞானியைத் தடுத்து நிறுத்தி, அவர் அவ்வாறு பயந்து ஓடிவரக் காரணம் என்னவென்று விசாரித்தார்கள். ஞானி தாம் எமனைக் கண்டதாகக் கூறினார். 'எமனையாவது மனிதர்கள் காண்பதாவது' என்று நினைத்த அவர்களை அழைத்துப் போய்த் தாம் கண்ட பொற்குவியலை அவர்களுக்குக் காட்டிவிட்டு ஓட்டம் பிடித்தார் ஞானி.

ஞானியின் மூடத்தனத்தை எண்ணிச் சிரித்த திருடர்கள் உடனே அந்தச் செல்வத்தைக் கொண்டு சுக போக வாழ்வு நடத்தத் திட்டமிட்டார்கள். அதற்கு முன்னதாகத் தங்கள் வயிற்றுப் பசியைப் போக்க நினைத்து, ஒருவனிடம் கொஞ்சம் பொன்னைக் கொடுத்து அருகிலுள்ள நகரில் சென்று உணவு வாங்கி வர அனுப்பினார்கள். உணவு வாங்கச் சென்றவன் ''இப்பொழுது எனக்கு அருமையான தருணம். நான் வாங்கும் உணவில் கொஞ்சம் விஷத்தைக் கலந்துவிட்டால் அதைச் சாப்பிடும் மற்ற இருவரும் இறந்து போவார்கள். அப்புறம் அந்தச் செல்வம் முழுவதையும் அனுபவிக்கலாம்'' என்று எண்ணியபடி சென்றான்.

உணவுக்காகக் குகையில் செல்வத்தின் அருகே இருந்த இரண்டு பேரும், ''உணவு வாங்கச் சென்றவன் திரும்பி வந்ததும் அவனைக் கொன்று விட்டால் இந்தச் செல்வத்தை நாமே பகிர்ந்து கொள்ளலாம்'' என்று திட்டமிட்டனர். உணவு வாங்கச் சென்றவன் திரும்பி வந்ததும், திட்டமிட்டபடியே அவன் மேல் பாய்ந்து கொன்றனர். பிறகு அவன் கொண்டு வந்திருந்த ஆகாரத்தைச் சாப்பிட்டார்கள். அதில் நஞ்சு கலந்திருந்ததால் அவர்களும் மடிந்தனர்.

மூன்று உயிர்களைப் பலி கொண்ட தங்கப் புதையல் குகையில் கேட்பாரற்றுக் கிடந்தது. ஞானி அதை எமன் என்று பயந்து ஓடியது சரிதானே?





யேசுபெருமான்

தமிழழகன்

எவ்வுயிரும் வாழவந்தார்
யேசு பெருமான்! — மக்கள்
இன்னல் யாவும் தீரவந்தார்
யேசு பெருமான்!

மன்னர் மன்னர் ஆகிவந்தார்
யேசு பெருமான்! — மூன்று
மன்னர்களும் போற்ற வந்தார்
யேசு பெருமான்!

சத்தியத்தைக் காக்கவந்தார்
யேசு பெருமான்! — தர்ம
சாந்திநெறி காணவந்தார்
யேசு பெருமான்!

பாவிகளைத் தாங்கவந்தார்
யேசு பெருமான்! — அவர்
பரநிலைக்கு உயரவந்தார்
யேசு பெருமான்!

தியாகவழி காட்டவந்தார்
யேசு பெருமான்! — அதில்
தெய்வஒளி ஊட்டவந்தார்
யேசு பெருமான்!

தன்னிகரில் லாதுவந்தார்
யேசு பெருமான் — தேவன்
தான்மனிதன் ஆகிவந்தார்
யேசு பெருமான்!






பண்டிகை - பலவிதம்



உலகம் முழுவதும் கொண்டாடப் படும் ஒரே பண்டிகை கிறிஸ்துமஸ். கிறிஸ்து மதம் உலகின் எல்லா நாடுகளிலும் பரவியுள்ளதுதான் இதற்குக் காரணம். ஏசுபிரான் பிறந்த நாள் தான் — டிசம்பர் 25ந் தேதி — கிறிஸ்துமஸ் விழா. உலகெங்கிலுமுள்ள குழந்தைகளுக்கு இந்தத் தினத்தில் கிறிஸ்துமஸ் பரிசுகள் கிடைக்கும். இந்தப் பரிசுகளைக் குழந்தைகளுக்கு அளிப்பவர் 'கிறிஸ்துமஸ் தாத்தா' என்ற **'சாண்டாக்ளாஸ்'** என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த 'சாண்டாக்ளாஸ்' நம்பிக்கை எல்லா நாடுகளிலும் கிடையாது. நாட்டுக்கு நாடு இந்த நம்பிக்கை மாறுபடுகிறதென்பது உங்களுக்குத் தெரியுமா?



இங்கிலாந்தில்தான் 'சாண்டாக்ளாஸ் தாத்தா. நீண்ட வெள்ளைத் தாடி. சிவப்புக் கோட்டு. ரெயின்டீர் என்ற கலைமான் இழுத்து வரும் பனிச் சறுக்கு வண்டியான ஸ்லெட்ஜில் பரிசு மூட்டையுடன் பவனி வருவார் சாண்டா. குழந்தைகள் தங்கள் கட்டிலின் கால்மாட்டில் ஸ்டாக்கின்ஸ்களைத் தொங்கவிட்டிருப்பார்கள். சாண்டா புகை போக்கி வழியாக இறங்கி வந்து இதற்குள் பரிசுப் பொருள்களைப் போட்டுவிட்டுப் போகார் — இது இங்கிலாந்துக் குழந்தைகளின் நம்பிக்கை.

பிரான்ஸிலே: பிரஞ்சு நாட்டுக் குழந்தைகள் தங்கள் காலணிகளை வீட்டு வாசல் கதவின் அருகே கிறிஸ்துமஸ் இரவு வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டு விடுவார்கள். தேவ குமாரனைக் காண அந்த வழியாகப் போகும் மூன்று அரசர்கள் வீட்டு வாசலில் நின்று இந்தக் காலணிகளில் பரிசுப் பொருள்களை நிரப்பி விட்டுப் போவார்கள். இப்படி நம்புகிறார்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரிட்டானிக் குழந்தைகள்.

பாபோஷ்கா என்றொரு பாட்டி வருவாள். இந்தப் பாட்டி கிறிஸ்துமஸ் தினத்தன்று மாலை தனது கூடையில் பொம்மைகளை நிரப்பிக் கொண்டு படுத்துத் தூங்கும் ஒவ்வொரு குழந்தையின் அருகிலும் வைத்துவிட்டுப் போவாள். இது **ரஷ்ய** நாட்டுக் குழந்தைகளின் நம்பிக்கை.

ஹாலந்து தேசத்துக் குழந்தைகளுக்கு டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்திலேயே கிறிஸ்துமஸ் பரிசுகளைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறார் ஸெயின்ட் நிக்கோலஸ். எப்படி? குதிரையின் மீது அமர்ந்தபடி நீக்ரோ வேலைக்காரன் பீட்டர் பின்தொடரப் பரிசு மூட்டையோடு வருவார் நிக்கோலஸ்.

லா பெஃபானா என்று ஒரு மந்திரக் கிழவி. ஆனால் இவள் ரொம்ப நல்லவள். கிறிஸ்துமஸ் தினத்துக்கு முன் நாள் மாலை புகை போக்கி வழியே வருவாள். ஒரு மணியைப் பலமாக ஒலிக்கச் செய்வாள். இந்த மணியோசைக்குக் கிறிஸ்துமஸ் பரிசு வருகிறது என்று பொருள். அண்டோனியோ ஆனந்தக் கூத்தாடுவான். இது எங்கு? **இத்தாலி** நாட்டில். இப்படி ஒரு நம்பிக்கை. இது புராதனப்



பழக்கம். நவீன இத்தாலியில் எப்படித் தெரியுமா? கிறிஸ்துமஸ் மரம் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. அலங்கரிக்கப்பட்ட இந்த மரத்தில் பரிசுப் பொருள்கள் கட்டித் தொங்கவிட்டிருக்கும். பொதுவாக எங்குமே இதுதான் வழக்கம். ஆனால் இத்தாலியில் 'யூல்' என்ற ஒரு வகை மரத்தின் அடிப் பாகத்தை வீட்டுக் கூடத்தில் கொண்டு வந்து அலங்கரித்து வைத்திருப்பார்கள். அதன் மேலே பரிசுப் பொட்டலங்கள் குவிக்கப்பட்டிருக்கும். குழந்தைகளின் கண்களைக் கட்டி விடுவார்கள். அவர்கள் அந்த யூல் மரத்தின் அருகே கட்டுண்ட கண்களுடன் போய் ஒரு பாட்டுப் பாட வேண்டும். உடனே அவர்களின் கண் கட்டு அவிழ்க்கப்படும். அந்தக் குழந்தை பரிசுக் குவியலிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு நகரும். அந்தக் குழந்தை ஆவலோடு அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அடுத்து வரும் குழந்தை தன் பரிசுக்காக யூல் மரத்தருகே பாடிக் கொண்டிருக்கும். எப்படி? தமாஷாக இல்லை?

ஆஸ்திரேலியாவில் கிறிஸ்துமஸ் விழாப் பழக்கம் முற்றிலும் மாறுபட்டது. மற்ற நாடுகளிலெல்லாம் இந்தச் சமயத்தில் பனி மூடிக் கிடக்கும். ஆகவே அதை 'வொயிட் கிறிஸ்துமஸ்' என்பார்கள். ஆனால் ஆஸ்திரேலியாவிலோ இது அவர்களுக்கு 'மிட் சம்மர்' வேனில் காலத்தின் இடைப்பகுதி. ஆகவே கிறிஸ்துமஸ் விழாவை சூரிய ஸ்நானம் செய்தும் பிக்னிக்குகள் போயும் உல்லாசமாகக் கழிக்கிறார்கள்.

ஸ்காண்டிநேவியாவில் கிறிஸ்துமஸ் பண்டிகையை எப்படிக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? பறவைகளுக்கு விருந்தளிப்பதன்மூலம். எப்படி? கோதுமைக் கதிர்களைத் தூண் போலக் கட்டி வயல் வெளியில் வைத்து விடுகிறார்கள். இதன் மேலேயும் கோதுமைத் தானிய மணிகளைப் பரப்பி யிருப்பார்கள். பறவைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்!

ஸ்விடன் நாட்டில் கிறிஸ்துமஸ் தினத்தை விடக் குதூகலமாக செயின்ட் லூசியாவின் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். இது டிசம்பர் 13ந் தேதி. ஓர் அழகிய பெண் வெள்ளை உடையில் செயின்ட் லூசியாவாக அலங்கரிக்கப்படுகிறாள். அவள் தலையில் மெழுகு வர்த்திகளால் ஆகிய ஒரு கிரீடம் சூட்டப்பட்டிருக்கிறது. மெழுகு வர்த்திகளைக் கொளுத்தி எரிய விடுகிறார்கள். இப்படி எரியும் மெழுகு வர்த்திக் கிரீடம் புனைந்த லூசியா பரிசுப் பொருள்களுடன் தம் சுற்றத்தார்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்கிறாள். பரிசுப்பொருள் என்ன தெரியுமா? சாக்லேட்டு தவிர இனிப்புக்கள். பல நகரங்களில் மாலையில் இந்த லூசியா வேஷமணிந்த பெண்களின் அணிவகுப்பு ஊர்வலமும் நடைபெறும். ஒவ்வொருவர் தலையிலும் மெழுகுவர்த்திகள் சுடர்விட வெள்ளை அங்கி அணிந்த பெண்கள் வரிசை வரிசையாக நடப்பது விழாவில் எத்தனை அழகாக இருக்கும்!

அது சரி, இப்படிக் குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள் கொண்டு வந்து தரும் சாண்டாகிளாஸ் களைத்துப் போய்விட மாட்டாரா? எத்தனை குழந்தைகள், எவ்வளவு பெரிய மூட்டை? ஒவ்வொரு வீடாகப் போய் வரும் அவருக்குப் பசி, தாகம் இருக்காதா? இந்தக் கவலை **டென்மார்க்** குழந்தைகளுக்கு ஏற்பட்டது. தங்களுக்குப் பரிசு தரும் தாத்தாவின் பசிக்கு ஒரு கிண்ணத்தில் பாலும் ஒரு தட்டில் அரிசிச் சாதமும் வைத்திருப்பார்கள். **ஹாலந்து** தேசத்துக் குழந்தைகள் இன்னும் ஒரு படி மேலே போய் விடுகிறார்கள். சாண்டாவை இழுத்து வரும் ரெயின்டியர்







கலைமானுக்கு உணவாகக் காரட்டுகளை யும், வைக்கோலையும் வைத்து வரவேற் கிறார்கள்.

சிரியா தேசத்துக் குழந்தைகளின் ஸாண்டாகிளாஸ் ஏறி வருவது ஒட்ட கத்தின் மீதுதான்! ஆகவே பரிசு மூட்டை சுமக்கும் அந்த மிருகத்தின் பசிக்குச் சிரியா நாட்டுக் குழந்தைகள் கொஞ்சம் கோதுமையும் குடிக்கத் தண் ணீரும் வைத்திருப்பார்கள்.

எப்படியானாலும் கிறிஸ்துமஸ் ஒரு மகிழ்ச்சிகரமான பண்டிகை. உலக க்ஷேமத்துக்கும் சந்தோஷத்துக் கும் கொண்டாடப் படுகிறது. நீங்கள் எங்கிருந்தாலும், யாராக இருந்தாலும் இந்த நாளில் உங்கள் சந்தோஷத்தை உங்கள் குடும்பத்தாருடன் பகிர்ந்து கொள்ளுவதோடு மட்டுமல்லாமல் உங் களை விட வசதிக் குறைவாக உள்ளவர் களுடனும் வயதானவர்கள், நோயாளி களுடனும், ஆதரவற்றவர்களுடனும் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதன் மூலம்தான் கிறிஸ் துமஸ் பண்டிகையின் உண்மையான தத்துவத்தை நிறைவேற்ற முடியும்.

என்ன புகழ் விலை?

இரத்தினம்

ஒரு கிராமத்தில் மிகப் பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் யாருக்கும் ஒரு காசு கொடுக்க மாட்டான். கஞ்சத்தனம் நிறைந்தவன். ஆனாலும் அவனுக்கு ஒரு தணியாத ஆசை. தன்னை எல்லோரும் புகழ வேண்டும், புலவர்கள் தன்னைப் புகழ்ந்து பாட வேண்டும் என்று தீராத ஆசை கொண்டிருந்தான். ஒரு நாள் புலவன் ஒருவனைச் சந்தித்து, ''புலவரே, உமக்கு ஒரு பொற் காசு தருகிறேன். என்னைப் புகழ்ந்து ஒரு கவிதை பாடுங் களேன்'' என்று கேட்டான்.

''ஒரு பொற்காசுக்காக உங்களைப் புகழ்ந்து பாட வேண்டுமா?'' என்றான் அந்தப் புலவன்.

''அப்படியானால் பத்துப் பொற் காசுகள் கொடுத்தால் என்னைப் புகழ்ந்து ஒரு கவிதை பாடுவாயா?'' என்றான் பணக்காரன் ஆசையோடு.

''கேவலம் பத்துப் பொற்காசுகளுக் காகக் கவிதை பாடி உங்களைப் புகழ வேண்டுமா?'' என்று மீண்டும் கேட் டான் புலவன்.

''சரி, பரவாயில்லை. நூறு பொற் காசுகள் கொடுக்கிறேன். என்னைப் புகழ்ந்து பாடுவாயா?'' என்று மீண்டும் கெஞ்சினான் பணக்காரன்.

''என்னிடம் நூறு பொற்காசுகளும் உங்களிடம் நூறு பொற் காசுகளும் இருக்குமானால் இருவரும் சமமாகிவிடு வோம். அப்பொழுதும் நான் பாட மாட்டேன்.''


''என்னிடம் இருக்கும் எல்லாப் பொற் காசுகளையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். பாடுவீர்களா?''

''அவ்வளவு பொற் காசுகளும் என் னிடம் இருந்தால் நான் ஏன் உங்களைப் புகழ வேண்டும்? அதிகமாகப் பொருள் இருக்கும் என்னைத்தானே நீங்கள் புகழ வேண்டும். ஐயா, பணக்காரரே! எதை



யும் வாயால் சொல்லி விட்டால் போதுமா? பயன் கருதாமல் வாரி வழங்குங்கள். உங்களைத் தேடிப் புகழ் தன்னாலே வந்து சேரும்'' என்றான் புலவன்.

பணக்காரன் முகத்தில் அசடு வழிய அங்கிருந்து அகன்றான்.


சிரிக்கச் சிரிக்க...
"என்ன ரொம்ப குஷியா ரேடியோ கேட்டுண்டிருக்கே!" "யாரோ கோழியூர் குஞ்சன்னு நன்னாப் பாடிண்டிருக்கார்!"
"இதோ பாருங்கோ குவளை காலி! இதில் தண்ணீர் வரவழைக்கிறேன்!"
"ஏண்டி இந்த மந்திரவாதியை எங்கோ பார்த்தமாதிரி இருக்கே; உம்... தெரிஞ்சு போச்சு. நம்ம பழைய பால்காரர்தான் இவர்!"
என்ன காத்து..
பாம் பாம்!
என்ன யோசனை!
சாமா
பள்ளிகூடம்
பெரியவர்கள்: ஆண்டவா! ஊரில் மழை கொட்டணும்டா அப்பா!
பையன்: ஒருத்தர்கூடக் கையில் குடை கொண்டு வராமல் இப்படி எல்லாரும் ரொம்ப சீரியஸாக வேண்டிக்கிறீங்களே, உங்க பிரார்த்தனை பலிச்சா என்ன ஆகிறது?
உபாத்தியாயர் பெயிண்ட் அடித்தவவனிடம்: பள்ளிக்கூடம் என்று எழுதச் சொன்னால் பள்ளிகூடம் என்று எழுதறையே; ஏறு பெஞ்சு மேலே!
"மொதல்லேயே பெஞ்சு மேலே நின்னுக்கிட்டுத்தான் எழுதினேன் ஸார்!"

விளையாடும் முறை

- இந்த விளையாட்டை எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். இதற்கு வேண்டியதெல்லாம் இரண்டு தாயக் காய்கள். குந்துமணியோ, பருப்புச் சோழியோ, பொத்தான்களோ இருபத்தி நாலு. எண்ணிக்கையைக் கணக்கிடக் காகிதமும் பென்சிலும் தேவை.

- ஒன்று முதல் ஆறு மட்டும் போதுமானால் ஒரு தாயக் காயையும், 7லிருந்து 12 வரை வேண்டுமானால் இரு தாயக் காய்களையும் குலுக்கி உருட்டவும்.

- தாயக் காய் — காய்கள் — காட்டும் எண்ணிக்கையுள்ள கட்டத்தில் ஆட்டக்காரர் தம் காயை வைக்க வேண்டும். அந்தக் கட்டம் காட்டும் எண்ணை அந்த ஆட்டத்தில் அவருடைய 'ஸ்கோர்' ஆகக் குறித்துக் கொள்ளவும்.

- ஒரே எண் கொண்ட இரு கட்டங்களிலும் காய்கள் இடம் பெற்றிருக்குமானால் அந்தக் கட்டத்துக்குக் காய் உருட்டியவர் அக்கட்டத்தின் வண்ணத்துக்கு உரிய எண்ணிக்கையை (விளக்கம் மேலே உள்ளது) இழக்க வேண்டும். உதாரணமாக நீலக் கட்டத்துக்கு இழப்பு நான்கு.

- மேலே பார்த்தீர்களா? ஒரு கிரீடம் இருக்கிறதில்லையா? இந்த ஆட்டத்தில் காலியாக உள்ள கடைசிக் கட்டத்தை யார் ஆக்கிரமிக்கிறார்களோ, அவர்களுக்கு அளிக்கப்

ஆண்டஸ் மலை இயேசுபிரான்

தென் அமெரிக்காவில் அர்ஜண்டினா என்ற நாட்டுக்கும் சிலி என்ற நாட்டுக்கும் இடையில் — எல்லைப் பகுதியில் — ஆண்டஸ் என்ற மலைத் தொடர் உள்ளது. இங்கு அப்ஸல்லட்டா (Upsal latta Pass) என்று ஒரு கணவாய். அதன் அருகே ஒரு பிரும்மாண்டமான இயேசுவின் சிலை நிறுவப்பட்டுள்ளது. இச் சிலையின் உயரம் இருபத்தாறு அடி.


கடல் மட்டத்திலிருந்து 13,053 அடி உயரத்தில் இந்தச் சிலையை அமைத்திருக்கிறார்கள். எதற்காக யாரால் இந்த இயேசு இங்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்? 1902ம் ஆண்டு மேலே சொன்ன இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட எல்லைத் தகராறு முடிவுற்றுச் சமாதானமேற்பட்டதன் நினைவாக இதை எழுப்பி இருக்கிறார்கள். சிலி நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஓர் இடத்தின் உரிமை பற்றி அர்ஜண்டினாவும் சிலியும் 1840ம் ஆண்டிலிருந்து சுமார் அறுபது வருடங்கள் போராடி வந்தன. இங்கிலாந்து மன்னர் ஏழாம் எட்வர்டின் தலையீட்டின் பேரில் ஒரு சுமுகமான ஒப்பந்தம் 1902ம் ஆண்டு இரு நாட்டுக்குமிடையே ஏற்பட்டது. இருநாடுகளும் சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. நன்றி நவிலும் செய்கையாக இரு நாடுகளின் எல்லைப் பகுதியில் மலை மீது இந்த அழகிய இயேசு பிரான் சிலையை உருவாக்கி நிறுவி இருக்கிறார்கள். உலக அதிசயங்களுள் இதுவும் ஒன்று.

படும் போனஸ்தான் அந்தக் கிரீடம். ஆட்டத்தின் போது கட்டங்களில் வைக்கும் காய்களை எடுக்காமல் அங்கேயே வைத்திருங்கள்.

❖ எல்லாக் கட்டங்களும் நிரம்பியானதும் மறுபடியும் தாயக் காய்களை உருட்டிக் காய்களை அப்புறப்படுத்திக் கொண்டு வாருங்கள். காய்களைக் கட்டத்தில் இடம் பெறச் செய்ய விளையாடியதைப் போலவே காய்களை வெளியேற்றவும் விளையாட வேண்டும். இதில் வரும் ஸ்கோர்களையும் குறித்துக் கொள்ளுங்கள்.

❖ கட்டங்களில் உள்ள எல்லாக் காய்களும் திரும்பப் பெறப்பட்டதும் அதிக பாயிண்டு எடுத்தவர்களுக்குக் கோகுலக் 'கோமான்' அல்லது 'கோமகள்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கலாமே!

விருது வழங்கும் கிறிஸ்துமஸ் விளையாட்டு






ரஹீம், நவீனின் கண்ணும் கருத்தும் எச்சரிக்கையோடிருந்தன. நல்லகாலம் வழியில் பாக் வீரர்களின் நடமாட்டமில்லை...
அதோ ஆஸ்பத்திரி வந்து விட்டது.
வீராதி வீர
கதை: கௌசிக
சித்திரம்: ரமணி..
துப்பாக்கியைக் கீழே தணியப்பா. நான் டாக்டர். நோயாளிக்கு உதவுவது நான் என் கடமை. அதோ பார் ஆம்புலன்ஸ் வண்டி.
இவர்களின் பார்வை ஆஸ்பத்திரியின் உள் பக்கம் சென்றதும் டாக்டரின் வஞ்சகம் புரிந்தது. அது என்றோ ஆஸ்பத்திரி. இன்றோ பாக் ராணுவ முகாம். டாக்டர் குரல் ஒலித்தது...
சார்ஜண்ட், க்விக்... இவர்களை உடனே வளைத்துக் கொள்.
ஏமாந்து போனோம்.
வகையாக நம்மை மாட்ட வைத்து விட்டான் இந்த டாக்டர்.
ஸ்டெச்சரில் இருந்த பெண் எங்கே? என்ன ஆனாள்? எப்படித் தப்பினாள்?
டாக்டரின் குழப்பத்துக்கு ஆம்புலன்ஸ் கார் என்று
அவர் வர்ணித்த ராணுவ லாரியிலிருந்து யந்திர
துப்பாக்கி பதில் சொல்லிக் கொண்டிருந்தது. வரும்
வழியிலேயே லைலாவுக்கு நினைவு திரும்பி விட்ட
நடப்பதை அறியக் கண்மூடிக் கிடந்தாள். விபரீதம்
விளையவே துள்ளிக் குதித்த அவள் முன்னே யந்தி
ரத் துப்பாக்கி காத்திருந்தது. பாக் வீரர்கள் பயந்
பறந்தனர். ரஹீமும் நவீனும் ஓடி வந்து லாரியில்
ஏறிக் கொண்டனர்...


அதோ செக் போஸ்ட். நான் அதைத் தகர்த்துக் கொண்டு போகப் போகிறேன். குனிந்து கொள்ளுங்கள்.
லைலா, சுட்டது போதும். அதிக ரகளை ஏற்பட்டால் நமக்கு ஆபத்து. இல்லையேல் மறுபடி அவர்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளுவார்கள்.
ராணுவ செக் போஸ்ட் தூளாகியது...
மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்தனர். இரு பாக் வீரர்.
லைலா.. யந்திரத் துப்பாக்கியைத் திருப்பு. மோட்டார் சைக்கிளின் சக்கரத்துக்கு ஒரு குண்டை அனுப்பு.
இதோ அவர்கள் எப்படித் தலை குப்புறக் கவிழ்கிறார்கள் என்று பார்.
லைலாவின் குறி என்றுமே தப்புவதில்லை..


நஸீம், கானகத்தி லுள்ளே எதற்காக ஓட்டிப் போகிறாய்?
முக்தி வாஹினியின் பாதுகாப்பைப் பார்க்க வேண்டாமா? தவிர இனி நாம் நகரில் இருக்க முடியாது..
அதே சமயத்தில் லைலா மறுபடி நினைவிழந்தாள். காயத்தில் ரத்தப் பெருக்கு. வண்டி போக முடியாத கானகம். ஆகவே அவளைக் கோவேறு கழுதை மீது கிடத்திக் கொண்டு போனார்கள்.
இதற்கு மேல் அனுமதியின்றிப் போக முடியாது. நான் சங்கேதக் குரல் கொடுக்கிறேன். முக்தி வாஹினிகள் நம்மை அழைத்துப் போக வருவார்கள்..
நஸீம் எழுப்பிய ஒலி புதர்களுக்கு மேலே பல தலைகளைத் தோன்றுவித்தது.
விடுதலைப் படை வீரர்களான முக்தி வாஹினிகள் பலர் விரைந்து வந்தனர். லைலாவை ஸ்ட்ரெச்சரில் வைத்து எடுத்துப் போனார்கள். உடனே அவளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.
இங்கு நல்ல டாக்டர் இருக்கிறாரா? உடனே சிகிச்சை அளித்து விட்டாரே!
அதோ தெப்- பித்தான்— பதுங்கி— கொண்டிருக் கிறாரே அவர் பெரிய டாக்டர்.
லைலாவின் காயம் பற்றிக் கேட்க அருகே சென்ற ரஹீம் அவரைக் கண்டதும்...
அப்பா! நீங்களா? இங்கே..
மகனே ரஹீம்! நீ எப்படி வந்தாய்?


றிந்தவர் கூடிருகல் பேசமாட்டார் ளாரேமே. ஆனால் ரஹீமும் அவன் அப் பாவும் நிறையப் பேசினார்கள்.
கனை இனி போர் டையாது. நம் சகோ ர்களான இந்தியப் டைகள் நம் உதவிக்கு ந்து பாகிஸ்தானியப் டைகளைச் சரண டை ச் செய்து விட்டதாம்.
நம் விடுதலைப் போர் இத் தனை விரைவில் வெற்றி கரமாக முடியுமென்று நினைக்கவே இல்லை. அல்லாவின் கருணையினால் அநியாயக்காரர்கள் அவ மானப் பட்டுப் போனார்கள். நிபந்தனை இன்றிச் சரண கதி ஒப்பந்தத்தில் கை யெழுத்துப் போட்டு ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டார்கள்.
அப்படியானால் இனி நம் நாட்டுக்கு விடுதலை, அப்படித் தானே? ஜெய் பங்களா தேஷ்!
அப்பா, அம்மா வையும் அந்தப் பாவிகள் பிடித் துக் கொண்டு போய் விட்டார்கள்.
அப்படியா? அல்லாஹ்வின் கருணை இருந்த மால் மீண்டும் உயிரோடு சந்திக் கலாம். இந்தப் பெண்...
இவள் பெயர் லைலா. இவன் பெயர் நவீன். இருவரும் பாகிஸ்தானியர் களின் வெறிச் செயலால் அநாதைகளாக்கப் பட்டவர் கள், என் தோழர்கள்.
தோழர்கள் மட்டுமல்ல, உன் உடன் பிறவாச் சகோதரனும் சகோதரியும் கூட. இனி இவ் விருவரும் நம்முடனேயே தான் வாழ வேண்டும்.
ரஹீம் உன்னையும் உன் தோழர்களையும் இப் படியே நம் தலைவர் முஜிபுர்ரஹ் மானிடம் அழைத்துப் போய் 'வீராதி வீரனை என் மகனைப் பாருங்கள்' என்று அறிமுகப் படுத் தப் போகிறேன். எங்கள் முகா மில் எல்லோரும் உன்னைப் பற் றித்தான் பேசிக் கொண்டிருப் பார்கள். வாருங்கள் போக லாம். ஜெய் பங்களாதேஷ்.
மற்றும்

ருஷ்யப் பாட்டி பாபோஷ்கா

வாண்டுமாமா

மார்க் காலத்தின் கடுமையான நேரம் அது. எங்கும் உறைபனி. இயற்கை அன்னை வெள்ளை ஆடை அணிந்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாள். நீர் நிலைகளெல்லாம் பனிப் பாறைக ளாகி யிருந்தன. கானகத்தில் உள்ள பைன் மரங்களிலெல்லாம் பனி மூடி வழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. ரஷ்யாவின் குளிர் காலம் ரொம்பக் கொடுமையானதாயிற்றே. அந்தக் கானகத்தின் ஓர் ஓரத்தில்தான் அந்தச் சின்னஞ் சிறிய மர வீடு இருந்தது. அதில்தான் தன்னந் தனியளாக வசித்து வந்தாள் பாபோஷ்கா. ரொம்ப வய தான பாட்டி அவள். உதவிக்கோ துணைக்கோ யாருமில்லை அவளுக்கு.

வெளியே பனிக் காற்று குத்தும் ஈட்டியாக வீசிக் கொண்டிருந்தது. இத்தனை வருஷங்களில் பாட்டி இதைப் போன்ற குளிரைக் கண்டதே இல்லை. கணப்புக்கு முன்னால் கம்பளிக்குள் புகுந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள் பாபோஷ்கா. கணப்பின் தீக்கொழுந் துகள் பாட்டிக்குக் கதகதப்போடு கடந்த நாட்களின் நினைவுகளையும் உண் டாக்கிக் கொண்டிருந்தது. இப்படி இதமான கதகதப்பில் இளமை நாட் களின் நினைவுகளில் மூழ்கி யிருந்த பாட்டியை அந்தச் சத்தம் நினைவுக்குக் கொண்டு வந்தது. 'இந்த வெள்ளை இரவின் அமைதியைக் கலைத்துக் கொண்டு யார் இப்படி என் வீட்டுக் கதவைத் தட்டுகிறார்கள்? பனிப் புயல் வீசும் இந்தப் பாதி ராத்திரியில் என் வீடு தேடி வருவது யாராக இருக்கும்?'



கதவைத் திறந்தாள் பாட்டி பாபோஷ்கா. 'ஹ' என்ற பனிக் காற்று அவளையும் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தது. பாட்டி தன் கம் பளியை இழுத்து அழுத்திப் போர்த் திக்கொண்டாள். நட்சத்திர வெளிச் சத்தில் வாசலில் மூன்று பேர் நிற் பதைக் கண்டாள் பாபோஷ்கா. அந்த மாதிரியான மனிதர்களை அவள் அதற்கு முன் கண்டதே யில்லை. பாட்டிக்குத் தன் தள்ளாமையும் தாங்க முடியாத குளிரும் மறந்து போயிற்று. வாசலில் நிற்பவர்களும் அவளைப் போலவே வய தானவர்கள்தான். அவர்களின் தலை முடியும் தாடியும் நீண்டு தொங்கின. முதுமையின் வெண்மையோடு முகங் களிலே அமைதியும் அன்பும் அறிவும் குடிகொண்டிருந்தன. அணிந்திருந்த ஆடைகளோ அற்புதமாக இருந்தன. என்ன பளபளப்பு! அந்த மாதிரியான நாகரிகமுள்ளவர்களை அவள் அந்தப் பகுதியில் இதுவரை பார்த்ததே இல்லை. அவர்கள் ஒவ்வொருவரின் கைகளிலும் ஒரு தங்கப் பேழை இருந்தது. வைரங் களும் ரத்தினங்களும், முத்துக்களும் கொண்டு இழைக்கப்பட்டிருந்தன அந் தப் பேழைகளில். அது மட்டுமா? அதிலிருந்து... ஆகா! எத்தகையதொரு மணம் கமழ்ந்தது? பேழையினுள் இத் தனை மணத்துக்கு உரிய பொருள் ஏதோ இருக்கிறது போலும்.

அந்த மூன்று அற்புத மனிதர்களைப் பார்த்த அதிசயத்தில் பேச்சற்று நின்று விட்டாள் பாட்டி பாபோஷ்கா. "புகழ் பெற்ற மூன்று அறிவாளிகள் நாங்கள். உலகில் சமாதானத்தைக் கொண்டு வரப் போகும் குழந்தை யொன்று இன்றிரவு பெத்லஹமில் பிறக்கப் போவதை அறிந்து வெகு தூரத்திலிருந்து பிரயாணப்பட்டு வரு கிறோம். அந்தக் குழந்தைக்குக் காணிக்கையாக்கவே இந்தப் பேழை களையும் கொண்டு வந்திருக்கிறோம்" என்றார் அந்த மூவரில் ஒருவர்.

"உலகில் சுபிட்சத்தையும் அமைதி யையும் கொண்டு வரப் போகும் தேவ குமாரனுக்கு உன்னுடைய அன்புப் பரி சையும் நீ அளிக்க வேண்டும் என்பதைக் கூறவே நாங்கள் இந்த வழியாக வந் தோம். கிளம்பு பாபோஷ்கா பெத்லஹ முக்கு. நேரமாகிறது" என்றார் இரண் டாவது மனிதர்.

''நான் கிழவி. எனக்கோ ரொம்ப வயதாகி விட்டது. இரவோ கனத்துக் கிடக்கிறது. பனியோ பயங்கரமாகப் பெய்கிறது'' என்றாள் பாட்டி பாபோஷ்கா.

''எங்களோடு கிளம்பு பாபோஷ்கா. உன்னை எங்களுடன் கூட்டிச் செல்லும்படி உத்தரவு. அதற்காகவே நாங்கள் இங்கு அனுப்பப் பட்டிருக்கிறோம்'' என்றார் மூன்றாவது அறிவாளி.

முடிவே இல்லாமல் வெள்ளைப் பனி மூடி நீண்டு கிடந்த பாதையைப் பார்த்தாள் பாட்டி. உள்ளே திரும்பி, கணகணவென்று தகதகத்துக் கொண்டிருக்கும் கணப்பைப் பார்த்தாள். குளிருக்குச் சுகமான அந்த இடத்தை விட்டுக் கிளம்ப மனமில்லை பாட்டிக்கு. ''நான் ரொம்ப வயசான தொண்டு கிழவி. பெத்லஹேம் வெகு தூரம் இருக்கிறது. அந்தப் பிரயாணத்தை என்னால் தாங்க முடியாது'' என்றாள் பாபோஷ்கா.

ஆனாலும் அந்த மூன்று அறிவாளிகளும் பாட்டியை வற்புறுத்தினார்கள். ''எங்களோடு வா, பாபோஷ்கா. உன்னை அழைத்துப் போகவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். தேவ குமாரனுக்கு உன்னுடைய அன்பளிப்பையும் எடுத்துக் கொண்டு கிளம்பு'' என்றார்கள்.

''சமாதான இளவரசனுக்கு ஏற்றதான வெகுமதி இந்த ஏழைக் கிழவியிடம் என்ன இருக்கிறது? உங்கள் ஆடைகளிலிருந்து நீங்கள் மிக மிக உன்னதமானவர்கள் என்று தெரிகிறது. உங்களிடமுள்ள நவரத்தினங்கள் இழைத்த தங்கப் பேழையினுள் சுகந்த மணம் பரப்பும் மிக உயர்ந்த பரிசை எடுத்துச் செல்லுகிறீர்கள். நானோ ஏழை. என்னிடம் என்ன இருக்கிறது? நீங்கள் போய் வாருங்கள். பெத்லஹேம் வெகு தூரத்திலல்லவா இருக்கிறது? அவ்வளவு நெடுந்தூரப் பயணத்துக்கு இந்த உடலில் வலுவில்லை'' என்று தான் வர இயலாமையை வருத்தத்துடன் தெரிவித்தாள் பாட்டி பாபோஷ்கா.

அதற்கு மேல் அந்த மூன்று பிரயாணிகளும் ஏதும் சொல்லவில்லை. வருத்தத்தோடு அவளையே சிறிது நேரம் பார்த்து விட்டு மௌனமாகத் திரும்பிப் போய் விட்டார்கள்.

பாட்டி பாபோஷ்கா மறுபடியும் தனது கணப்பருகில் போய் உட்கார்ந்தாள். நெருப்பு தகதகத்தது. குளி



ருக்கு இதமாக இருந்தது. ஆனால் முன்னைப் போல இளமை நினைவுகள் இதயத்தில் உருவாகவில்லை. எதையோ இழந்துவிட்ட தாபமும் தவிப்பும்தான் மேலோங்கி நின்றன. ''நான் அவர்களுடன் பெத்லஹேமுக்குப் போயிருக்கலாம். உலகை உய்விக்க அவதரிக்கப் போகும் சமாதானத்தின் இளவரசனைக் காணப் போயிருக்கலாம். இளவரசர்களைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. ஆனால் தேவ குமாரன் ஒரு குழந்தை. எனக்குக் குழந்தைகள் என்றால் பிடிக்குமே....'' இப்படிச் சிந்தனை வட்டமிட்டது பாட்டி பாபோஷ்காவின் உள்ளத்தில். ''ஆனால் ஓர் இளவரசனுக்குக் கொடுக்க ஏற்ற பரிசு என்னிடம் என்ன இருக்கிறது...?'' என்ற நினைப்பிலே வாடியது பாட்டியின் முகம். உடனே திடீரென்று அவள் முகத்தில் ஓர் ஒளி ஏற்பட்டது. ''அந்த மூவரும் மிக உயர்ந்த பரிசாகக் கொண்டு போகிறார்கள். ஆனால் பிறக்கப் போகும் சமாதானத்தின் தூதன் இளவரசனானாலும் குழந்தைதானே? குழந்தைகள் எதை விரும்புவார்கள் என்று எனக்குத் தெரியும். நாளைக்கு அதிகாலையில் நான் பெத்லஹேமுக்குக் கிளம்புகிறேன். என்னுடைய பரிசுப் பொருளுடன்'' என்ற முடிவோடு கண்ணயர்ந்தாள் பாபோஷ்கா பாட்டி.




பால் வெள்ளைப் பனி மூடிய காலைப் போதில் பாபோஷ்கா பெத்லஹேமுக்குப் பயணமானாள். அவள் கையிலே ஒரு கூடை. அதிலே விதம் விதமான விளையாட்டுப் பொம்மைகள், பந்துகள், மணிகள், ரஸகுண்டு — இப்படிக் குழந்தைகள் விரும்பி ஏற்று மகிழும் விளையாட்டுப் பொருள்கள் நிரம்பியிருந்தன.


வெண்மை விரிப்பான பனிப் பாதையில் முன்னால் சென்ற அந்த மூன்று அறிவாளிகளின் கால் தடம் தெரியவே இல்லை பாட்டிக்கு. பெத்லஹேமுக்கு எப்படிப் போவது? வழியில் யாரைக் கேட்டாலும், ''பெத்லஹேமுக்கா, பாபோஷ்கா? இன்னும் போக வேண்டும், இன்னும் போக வேண்டும்'' என்று தான் கூறினார்கள்.

கிராமம் கிராமமாக, நகரம் நகரமாகப் பாட்டி பாபோஷ்கா தேடிக் கொண்டு போனாள். ஆனால் பெத்லஹேமுக்கு அவள் வந்து சேரவே இல்லை. அந்தத் தள்ளாத வயதிலும் கூட அவள் தனது பிரயாணத்தைக் கைவிடவில்லை. ஊர் ஊராக இன்னும் போய்க் கொண்டேயிருக்கிறாள். சமாதானத்தின் இளவரசனாகப் பிறந்துள்ள குழந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறாள்.

ஒவ்வொரு வருஷமும் கிறிஸ்துமஸ் பண்டிகையின் முதல் நாள் மாலை பகல் தேய்ந்து இரவு தன் போர்வையை நகரங்களின் மீது போர்த்தும்போது, கிராமங்களிலும், நகரங்களிலும் விளக்குகள் ஒளி சிந்த ஆரம்பிக்கும் வேளையில் பாட்டி பாபோஷ்கா குழந்தைகள் உள்ள ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஓசைப்படாமல் நுழைகிறாள். குழந்தைகளின் படுக்கை அறைக்குப் போகிறாள். அயர்ந்து தூங்கும் குழந்தைகளுக்கு அன்போடு முத்தம் கொடுக்கிறாள். பிறகு தன் கூடையிலிருந்து ஒரு பொம்மையை எடுத்துக் குழந்தையின் அருகிலே வைக்கிறாள். ஓசைப்படாமல் வெளியேறி விடுகிறாள். வெளியில் வந்ததும் அவள் வாய் முணுமுணுக்கிறது. ''பாபோஷ்கா! இன்னும் மேலே போ போ, மேலே மேலே... இன்னும்... இன்னும்...!'' முதுமையால் சுருங்கிய அவள் இதழ்களில் முறுவல் மலர நடக்கிறாள், அடுத்த குழந்தைக்குப் பரிசு தர. இப்படிப் பாட்டி பாபோஷ்காவின் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.— இன்னமும்தான்!

இந்தக் கூண்டுக்குள்ளே ஏதோ ஒரு மிருகம் ஒளிந்து கொண்டிருக்கிறது. அது என்னவென்று கண்டுபிடிக்க வேண்டுமானால் ஒன்று முதல் முப்பது வரையிலுள்ள புள்ளிகளைப் பென்சிலால் இணைத்துப் பாருங்கள்.





சுண்டு குண்டு சீமாத்தாத்தா

— சாமா —

ஒரு கல்யாணத்தை உத்தேசித்துத் திருப்பதிக்குக் கிளம்ப ஏற்பாடாகி விட்டது. சுண்டுவும் குண்டுவும் தாங்கள் புகை வண்டியில் போவதைக் குறித்துக் கொம்மாளமடித்தார்கள்.

''ஏண்டிம்மா, வீட்டை நன்னாப் பூட்டினியா? பூட்டை இழுத்துப் பார்த்தாயா?' என்றார் சீமாத் தாத்தா.

''பாட்டி இழுத்ததை நாங்கள் பார்த்தோம்!'' என்றார்கள் அவர்கள்.

''சாவியை யாரிடம் கொடுத்தே?''

''நன்னா இருக்கு கேள்வி? உங்க கையிலேதானே வைத்திருக்கிறீர்கள்?''

''ஆமாம். இருக்கு, இருக்கு. என்ன அசட்டு மறதி!'' என்று சொல்லிச் சிரித்தார் தாத்தா. அடிக்கடி சாவி கைநழுவிக் கீழே விழுந்தபோதெல்லாம் சுண்டுவும் குண்டுவும் அதை எடுத்துத் தாத்தாவிடமே கொடுத்தார்கள்.

கல்யாணம் முடிந்த இரவே எல்லாரும் ஊருக்குத் திரும்பினார்கள். இரவு பத்தரை மணிக்கு வீடு போய்ச் சேரலாம் என்று எண்ணினார்கள். ஒரு ஸ்டேஷனை வண்டி கடக்கும்போது ஸ்டேஷன்மாஸ்டர் இன்ஜின் டிரைவரிடம் சாவியைக் கொடுத்தபோது தான் தங்கள் வீட்டுச் சாவியைப் பற்றி சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் ஞாபகம் வந்தது. இரண்டு பேரும் தங்கள் தங்கள் டிராயரைத் துழாவினார்கள். சாவியைக் காணோம். ரகசியமாக, ''தாத்தா சாவியை உங்கிட்டேதானே கொடுத்தார்?'' என்றான் சுண்டு. ''இல்லை. உங்கிட்டேதான் கொடுத்துப் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொன்னார்'' என்றான் குண்டு.

''நாம் அந்தத் திருப்பதி வேங்கடாசலபதியை வேண்டிக் கொள்வோம். 'அப்பா கோவிந்தா! நாங்கள் பேராபத்தில் உள்ளோம். இந்தச் சாவிப் பிரச்னையை எப்படியோ நீதான் தீர்த்து வைக்க வேண்டும். தீர்த்து வைத்தால் நாங்கள் உன் சந்நிதிக்கு வந்து தலையை மொட்டையடித்துக் கொள்கிறோம்'' என்று பிரார்த்தித்துக் கொண்டனர்.

வீடு வந்ததும் சுண்டுவும் குண்டுவும் முதலில் ஓடினார்கள். வீட்டுக் கதவு திறந்திருப்பதைப் பார்த்தார்கள். 'ஏ, கோவிந்தா! உனக்கு நமஸ்காரம். எங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து விட்டாயே! ஆகவே அடிக்கிறோம் மொட்டை' என்று குதித்தனர்.

தாத்தாவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'கோவிந்தன் காப்பாத்தினானா?' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே— உள்ளிருந்து ஒருவன் அவர்களைத் தள்ளிக் கொண்டு ஓடினான். ''ஐயோ, திருடன் என்று கத்தினார் சீமாத்தாத்தா.

''அவனைத் திருடன் என்று சொல்லாதீங்கோ. எங்களைக் காப்பாற்ற வந்த கோவிந்தன்'' என்றனர் அவர்கள்.

''கோவிந்தனா? என்ன பேத்துறீங்க?''

''ஆமாம், தாத்தா! சாவியை எங்களிடம் நீங்கள் கொடுத்தீர்கள் இல்லையா? நாங்கள் சாவியைத் தொலைத்துவிட்டோம். கோவிந்தனைப் பிரார்த்தித்தோம்...... கோவிந்தன் வீட்டைத் திறந்துவிட்டு ஓடுகிறான்!'' என்றார்கள்.

''நாசமாய்ப் போச்சு. சாவி என்னிடம்தான் இருக்கு. இதோ பார்!'' என்றார் தாத்தா. பையன்கள் அப்படியே மயங்கிக் கீழே சாய்ந்தார்கள்!



ஓடிப்போனவர்களுக்கு

தோற்றவர்கள்தான் ஓட்டமெடுப்பார்கள் உலகத்திலே. ஆனால் ஒரு விளையாட்டிலே ஓட்டம் எடுப்பவர்கள்தான் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். அந்த விளையாட்டு கிரிக்கெட்டுத்தான் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இந்த மாதம் கிரிக்கெட் ரசிகர்களுக்கான மாதம். இது கிரிக்கெட் சீஸன். அப்பாவும் அண்ணனும் டெஸ்ட் மாட்சு பார்க்கப் போயிருக்கும்போது 'நீங்கள் நண்பர்களுடன் தெரு முனையில் உள்ள மைதானத்தில் மட்டையுடன் பிரபல சோபர்ஸாகவும், விஜய் மர்ச்செண்டாகவும், வேங்கடராகவனாகவும் உங்களை நினைத்துக்கொண்டு மட்டை வீசி மகிழும் சீசனும் இதுதான் இல்லையா? அது சரி. உங்களையெல்லாம் இப்படிப் பைத்தியமாக அடிக்கும் இந்தக் கிரிக்கெட் தோன்றியது எப்போது, வளர்ந்தது எப்படி, என்ற விவரமெல்லாம் தெரியுமா?

முதன் முதலில் கிரிக்கெட் எப்போது எங்கு விளையாடப்பட்டது? 1550ம் ஆண்டு இங்கிலாந்தின் சர்ரேயிலுள்ள கில்டுஃபோர்டு என்னுமிடத்தில் ஒரு விளையாட்டை ஆடியிருக்கிறார்கள். இதற்குக் கிரிக்கெட் என்று பெயர். அது இன்றைய ஆட்டத்தைப் போலிருந்ததா என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை. இந்த ஆட்டத்தில் ஆலிவர் கிராம்வெல் கலந்து கொண்டாராம். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் 1700ம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனிலுள்ள க்ளாப்ஹாம் காமன் என்ற இடத்தில் ஆடப்பட்டது.

கிரிக்கெட் ஆட்டத்துக்கு முதன் முதலில் விதி முறைகள் வகுக்கப்பட்டது 1744ம் ஆண்டில்தான். இங்கிலாந்திலுள்ள கெண்ட் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்தான் இந்த விளையாட்டில் பிரபலமானவர்களாக விளங்கி வந்தார்கள். பதிவு செய்யப்பட்ட முதல் ஆட்டம் 1744ம் ஆண்டு ஜூன் மாதம் 18ந் தேதி கெண்ட் ஆட்டக்காரர்களுக்கும் அகில இங்கிலாந்து ஆட்டக்காரர்களுக்கும் இடையே நிகழ்ந்தது. நடந்த இடம் ஃபின்ஸ்பரியிலுள்ள ஆர்ட்டிலரி மைதானம். கெண்ட் ஒரு விக்கெட்டில் வெற்றியடைந்தது. அந்தக் காலத்தில் கிரிக்கெட் விளையாட்டுக்களை 'வேஜர்ஸ்' — பந்தயம் கட்டுபவர்கள் — தான் நடத்தி வந்தார்கள். சில ஆட்டங்களுக்கு 500 பவுன்களுக்கும் மேல் 'பந்தயம்' கட்டப்பட்டதுண்டு. இதனால் ஏற்பட்ட விவாதங்களினால் இந்த ஆட்டத்துக்கு நிரந்தரமான விதி முறைகளை வகுக்க முற்பட்டார்கள். ஆதியில் விக்கெட் என்பது இரண்டு குச்சிகளும், அதன் மீது ஒரு பெயிலும்தான். மூன்றாவது 'ஸ்டம்ப்' முப்பது வருஷங்களுக்குப் பிறகே புகுத்தப் பட்டது. விக்கெட்டுகளுக்கு இடையே உள்ள தூரம் இப்போதுள்ளது போலவே அப்போதும் 22 கெஜங்களாகத்தான் இருந்தது.

கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் உடைகள் காலப்போக்கில்.....





ஆஸ்திரேலியப் பழங்குடிக் கிரிக்கெட்டர்கள்

கிரிக்கெட் கிளப்புகளின் ஒப்புதல்களின் மீது பல வகையான சட்ட திட்டங்கள் அவ்வப்போது வகுக்கப்பட்டன. 1771ல் கிரிக்கெட் மட்டைகளின் அகலம் நாலரை அங்குலமாக இருக்க வேண்டும் என்ற விதி கொண்டு வரப்பட்டது. காரணம் ஓர் ஆட்டக்காரர் விக்கெட்டுகளை விட அகலமான மட்டையைப் பயன்படுத்தியதுதான். எந்த ஒரு ஃபீல்டராவது பந்தைத் தமது தொப்பியினால் தடுத்தால், அதற்கு ஃபெனல்டியாக ஐந்து ரன்களைக் கணக்கிடுவது 1798-ல் ஏற்பட்டது. 1810ல் பந்துகளை வீசும் பௌலர்கள் தங்கள் கைகளை முழங்கைகளின் உயரத்துக்கு மேல் உயர்த்தக் கூடாது என்ற விதி வகுக்கப்பட்டுப் பல வருஷங்களுக்கு 'அண்டர்

ஒன்பதில் குரு!

ஆர்ம் பௌலிங்' பழக்கத்தில் இருந்தது. அந்தக் காலத்து மோசமான பிட்சுகளில் 'ஓவர் ஆர்ம் பௌலிங்' அபாயகரமானதாக இருந்தது. கைகளைத் தூக்கிச் சுழற்றிப் பந்தைப் 'பௌல்' செய்யும் ஆட்டக்காரர்களும் இருந்தார்கள். இவ்விரு பழக்கங்களுக்கிடையே காரசாரமான விவாதங்கள், அபிப்பிராய பேதங்கள் முப்பது வருஷங்கள் வரை தொடர்ந்து நடைபெற்றன. இந்நிலையில்தான் 'பாட்' (pad) களும் கையுறை (க்ளவ்ஸ்)களும் புழக்கத்துக்கு வந்தன. 1827ம் ஆண்டு மூன்று பரிசோதனை ஆட்டங்கள் ஆடப்பட்டன. எதற்காகத் தெரியுமா? கைகளைத் தோள் பட்டைக்கு மேலே உயர்த்திச் சுழற்றிப் பந்தை வீசுவதிலுள்ள சௌகரியங்களை உறுதிப் படுத்துவதற்காக. 1835ல்நிரந்தரமாகவே இப்படிப் பந்தை 'பௌல்' செய்வதற்கான விதிகளை எம். ஸி. ஸி. திருத்தி அமைத்தது. ஆனாலும் 1864ல்தான் 'ஓவர் ஆர்ம் பௌலிங்' சட்டபூர்வமாக அங்கீகாரமாகியது.

அக் காலத்து கிரிக்கெட் கோஷ்டிகள் ஆடம்பரப் பிரியர்களாலும், பிரபுக்களாலும், செல்வச் சீமான்களாலுமே நிர்வகிக்கப்பட்டு வந்தன. இவர்கள் கூடும் இடம் கிரிக்கெட் ஆட்டத்தின் தலைமையகமாகியது. லண்டனிலுள்ள செல்வங் கொழிக்கும் ஒரு பகுதியில் தாமஸ் லார்டு என்பவர் 1787ம் ஆண்டு ஒரு கிரிக்கெட் மைதானத்தை நிறுவினார். அன்று ஆரம்பமானதுதான் எம்.ஸி.ஸி. என்று பிரபலமாக விளங்கும் மேரில்போன் கிரிக்கெட் கிளப். (Marylebone Cricket Club) தாமஸ் லார்டும் எம்.ஸி. ஸி.யும் இதன் பிறகு இரு முறை இடம் பெயர்ந்தார்கள். முடிவாக, 1814ல்தான் இப்போதுள்ள 'லார்ட்ஸ்' மைதானத்தில் நிரந்தரமாக நிலை பெற்றார்கள். மிடில்ஸெக்ஸ் கௌண்டி கிரிக்கெட் கிளப்புக்கும் இந்த லார்ட்ஸ் மைதானம்தான் தாயகம். 1836ல் நிறுவப்பட்ட கிரிக்கெட் கிளப் இது.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் இங்கிலாந்துக்கு விஜயம் செய்



— கிருஷ்ணவேணி

தது 1868ம் ஆண்டில். இவர்கள் ஆஸ்திரேலியப் பழங்குடிகள். இவர்களுடைய பெயர்கள் விநோதமாக இருந்தன. டிக் எ டிக், புலி, கொசு — என்றெல்லாம் இவர்களுக்குப் பெயர். இவர்கள் கிரிக்கெட் ஆடியதோடு ஈட்டி எறிதல், பூமராங் வீசுதல் ஆகியவைகளையும் பொதுமக்களுக்குச் செய்து காட்டினார்கள். டெஸ்ட் மாட்சுகள் ஆரம்பமானது 1877ம் ஆண்டில்தான்.

இங்கிலாந்து கோஷ்டி முதன் முதலில் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்து விளையாடியதும் இந்த ஆண்டில்தான். 'ஆஷஸ்' என்று கேள்விப் பட்டிருப்பீர்களே? கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்களுக்கெல்லாம் 'ஆஷஸ்' என்றால் என்னவென்று தெரியும். இது எப்படி வந்தது தெரியுமா?

1882-ம் ஆண்டில் ஆஸ்திரேலியக்கோஷ்டி இங்கிலாந்துக்கு விளையாட வந்தது. ஓவல் மைதானத்தில் டெஸ்ட் மாட்ச். இந்த விளையாட்டில் எதிர்பாராத விதமாக இங்கிலாந்தை ஆஸ்திரேலியர்கள் ஏழு ரன்களில் வெற்றி பெற்று விட்டார்கள். இங்கிலாந்துக்குப் பேரிழப்பு. 'ஸ்போர்ட்டிங் டைம்ஸ்' என்ற லண்டன் பத்திரிகை கீழ்க் கண்டவாறு இப்படியொரு வேடிக்கையான அறிவிப்பு வெளியிட்டது.



1882ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், 29ம் தேதியன்று ஓவல் மைதானத்தில் மரணமடைந்த இங்கிலாந்து கிரிக்கெட்டுக்கு அதன் அன்பார்ந்த நினைவில் பாதிக்கப்பட்ட ஏராளமான கிரிக்கெட் ரசிகர்களும் நண்பர்களும் தங்களது வேதனை கலந்த ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

குறிப்பு: உடல் தகனம் செய்யப்பட்டுச் சாம்பல் ஆஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

இந்த அவமானத்தை விரைவிலேயே போக்கிக் கொண்டது இங்கிலாந்து. அதே ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு விளையாடச் சென்ற இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டி மெல்போர்ன் மைதானத்தில் ஆஸ்திரேலியாவோடு மோதியது. முதல் டெஸ்டில் தோல்வி கண்டாலும் சில நாட்களில் அதே மைதானத்தில் ஒரே ஒரு இன்னிங்ஸில் வெற்றி வாகை சூடியது. ஆர்வம் மிக்க இந்த வெற்றியைப் பாராட்டி மெல்போர்ன் மாதர்கள் இங்கிலாந்து கோஷ்டி காப்டனிடம் ஒரு மண் பாத்திரத்தை அளித்தார்கள். அதில் இருந்தது என்ன தெரியுமா? அந்த மாட்சில் பயன்பட்ட ஸ்டம்ப், பெயில் ஆகியவைகளை எரித்து அதன் சாம்பலை அந்த மண் பாத்திரத்தினுள் வைத்து வழங்கினார்கள். 'ஸ்போர்ட்டிங் டைம்ஸ்' கேலியாக வெளியிட்டதை நிஜமாகவே நடத்திக் காட்டி விட்டார்கள் ஆஸ்திரேலிய மாதர்கள். சாம்பல் அடங்கிய இந்தக் குடத்தை இங்கிலாந்து கோஷ்டி காப்டன் எம். ஸி. ஸி.க்கு அளித்தார். காலத்தினால் பொலிவிழந்து போனாலும் அந்த மண் பாண்டம் இன்றும் ஒரு கண்ணாடிப் பெட்டியில் லார்ட்ஸிலுள்ள கிரிக்கெட் கண்காட்சியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இதுதான் 'ஆஷஸின்' (சாம்பலின்) கதை.

காமன்வெல்த் நாடுகளிடையே பரபரப்பூட்டும் டெஸ்ட் ஆட்டங்கள் ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு மிடையே ஆடப்பட்டது 1960ல். இது வெற்றி தோல்வி இன்றி முடிந்தது.

கிரிக்கெட் ஆட்டத்தில் புகழ் குவித்தவர்கள் பலர் இருக்கிறார்கள். டாக்டர் டபிள்யூ. ஜி. கிரேஸ் மிகப் பிரபலமானவர். 54,896 ரன்களும் 2,876 விக்கெட்டுகளும் எடுத்தவர். 60 வயது வரை கிரிக்கெட் விளையாடியவர். மிக அதிகமான ரன்களை எடுத்தவர் ஸர்ரேயைச் சேர்ந்த ஸர் ஜாக் ஹாப்ஸ் — ரன்கள் 61,237. இப்படிப் பலர் இருக்கிறார்கள். இந்த விளையாட்டில் புகழ் பெற்றவர்களின் பெயர்கள் எல்லாம்தான் உங்களுக்கு அத்துப்படியாயிற்றே?

இன்னொரு விஷயம் தெரியுமா? பெண்களைக் கிரிக்கெட் ரசிகர்களாகத்தானே இங்கு நாம் காண்கிறோம்? ஆனால் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, நியூஸிலாந்து இங்கெல்லாம் பெண்கள் கிரிக்கெட் கோஷ்டியே உள்ளது. இருநூறு வருஷங்களாக இவர்கள் விளையாடி வருகிறார்களாம். இவர்களுக்குள் போட்டா போட்டிப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. எங்கே புறப்படுகிறீர்கள்? டெஸ்ட் மாட்ச் பார்க்கவா, காமெண்ட்ரி கேட்கவா?

மூளைக்கு வேலை


☐ கீழே உள்ள பையன் எதன் மீதோ உட்கார்ந்து கொண்டிருக்கிறான் என்று தெரிகிறது. விஷமக்காரப் பயலின் கை ஓங்கியிருப்பதிலிருந்து அவன் அதை அடித்து ஓட்டுகிறான் போலவும் இருக்கிறது. அவன் ஏறி அமர்ந்திருக்கும் மிருகம் எதுவாக இருக்கும்? குழம்பிக் கொள்ளுவானேன்! ஒன்று முதல் 42 வரையிலுள்ள புள்ளிகளை ஒன்றுசேருங்கள். புரிந்து விடுகிறது.

☐ பட்டு, பாட்டி வீட்டுக்குக் கிளம்பிவிட்டான் தனியாக. வழியில் காடு இருக்கிறதே, அங்கு நரிகள் இருக்குமே என்ற பயம் முதலில் இல்லை. ஆனால் நடு வழியில்தான் பயம் பிடித்துக் கொண்டது. பாவம் பட்டு! அவனை நரியிடமிருந்து காப்பாற்றிப் பாட்டி வீட்டுக்கு அழைத்துப் போகிறீர்களா? பென்சில் முனையால் அவன் போகவேண்டிய வழியைக் காட்டினால் போதும்.

☐ அந்தக் கரடிக்கு நல்ல பசி. அந்தக் களைப்பில் தூங்கிவிட்டது. தூக்கத்தில் அது தன் உணவைக் கனவு காணுகிறது. அது கனவு காணும் உணவு என்னவாக இருக்கும்? தெரியவில்லையா? கவலைப்பட வேண்டாம். வரிசையாக எண்கள் குறிக்கும் புள்ளிகளை ஒன்றுசேருங்கள்.

☐ சங்கரன் ஒரு சாரணன். வெளியூருக்குக் 'காம்ப்' போனார்கள். கூடாரம் அடித்துத் தங்கினார்கள். பிறகு ஊர் சுற்றிப் பார்க்கப் போனார்கள். சங்கரன் பிரிந்து போய் விட்டான். கூடாரத்துக்குத் திரும்ப வழி தெரியவில்லையாம். கொஞ்சம் உதவுங்களேன்.









கிணற்றில் விழுந்த சங்கிலி

குகப்பிரியை

ஒரு பையன் கிணற்றின் கரையிலே உட்கார்ந்து ஓவென்று அழுது கொண்டிருந்தான். அது ஒரு பெரிய தென்னந்



தோப்பு. அதன் நடுவிலேதான் அந்தப் பெரிய கிணறு இருந்தது. அந்த வழியாக ஒரு திருடன் வந்தான். அவனைப் பார்த்தால் திருடன் என்று சொல்ல முடியாது. நல்ல வெள்ளையான வேஷ்டி, சட்டை, தலையிலே சிவப்புத் தலைப்பாகை, கையிலே கடிகாரம், தோளிலே ஒரு தேங்காய்ப்பூத் துண்டு.


பையனுடைய அழுகையைக் கேட்டுத் திருடன் அருகில் வந்தான். அவன் முதுகைத் தொட்டுத் தடவி, ''ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டான். பையன் மேலும் மேலும் விம்மி விம்மி அழுது கொண்டே, ''நானும் என் தோழர்களும் இங்கே ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தோம். ஒரு பையன் என் கழுத்திலே இருந்த தங்கச் சங்கிலியைப் பிடுங்கிக் கிணற்றிலே போட்டு விட்டான். வீட்டுக்குப் போனால் அம்மா பிரம்பினால் அடித்து நொறுக்கி விடுவான்'' என்று சொல்லி மேலும் விசும்பினான்.

திருடன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. இன்று சிரமப்படாமலே பொன் சங்கிலி கிடைக்கப் போகிறது என்று நினைத்தான். ''தம்பி! இதற்காகவா அழுகிறாய்? நான் ஒரு நொடியிலே உன் சங்கிலியை எடுத்துத் தருகிறேன்'' என்று சொல்லி அவனைத் தேற்றினான். பிறகு மிகவும் அன்பான குரலில், ''நான் என் உடைகளை மேலே வைத்து விட்டுக் கிணற்றில் மூழ்குகிறேன். நீ என் துணிமணிகளுக்குக் காவல் இரு'' என்று சொல்லித் தன் சட்டை, தலைத் துணி, வேஷ்டி, கடிகாரம், ஒரு கனமான பர்ஸ் இவைகளை மேட்டிலே வைத்துவிட்டுக் கோவணத்துடன் கிணற்றில் இறங்கினான்.


ஆயிற்று. பலமுறை முழுகி முழுகிக் கைநிறைய மணலை எடுத்து ஓரமாய் வந்து பார்த்தான். சங்கிலி கிடைக்கவேயில்லை. அலுத்துச் சலித்துப் போய் மேலே ஏறி வந்தான். மேலே வந்து கைப்பிடிச் சுவரைப் பற்றி வெளியில் குதித்து நாற்புறமும் பார்த்தான். பையனையும் காணோம்; தன்னுடைய உடைமைகளையும் காணோம்.

''நானே திருடன். என்னையே ஏமாற்றி என்னுடைய உடைகளைத் தட்டிக் கொண்டு போய் விட்டானே, இந்தக் குட்டித் திருடன். பிறரை வஞ்சித்தால் நாமும் வஞ்சிக்கப்படுவோம் என்பது உண்மைதான்!'' என்று சொல்லிக் கொண்டே கோவணத்துடன் எப்படி எங்கே போவது என்று தவிக்கலானான் அந்தப் பெரிய திருடன்.





பலே
பாலு!
கற்பனை:
பாண்டு
சித்திரம்:
சலலம்
டேய் பாலு! அதோ அனப்பு ஐயா சாமி வரார். 'அந்தக் காலத்திலே நான்'னு ஆரம்பித்துப் பிராணனை வாங்கிடுவார்.
நாம் அவரைக் கவனிக்க வேண்டாம். இந்தக் கடையோட 'ஷோ வின்டோ'வைப் பார்க்கிற மாதிரி நிக்கலாம்.
பசங்களா என்ன வேடிக்கை பாக்கிறீங்க? உங்க வயசிலே நான் இப்படியா இருந்தேன். ஓடற பாம்பை மிதிக்கிற வயசும் பாருங்க. ஆறும் பாரு, நான் ஓடி வர காளையைச் சும்மா அப்படியே....
ஜல்லிக் கட்டுக் காளைன்னு கேள்விப் பட்டிருக்கீங்களா? நல்ல முரட்டுக் காளை. சும்மா, ஈட்டி மாதிரிக் கொம்புங்க. நாலு கால் பாய்ச்சலிலே என்னை நோக்கி வருது. அப்ப எனக்கென்ன வயசு? எட்டு... ஆமா, எட்டே தான். குபீர்னு தாவினேன். அதோ ரெண்டு கொம்புங்களையும் புடிச்சு அப்படியே திருக்... காளைக்கு எப்படி இருந்திருக்கும்?
தெரியலியே! நான் காளை இல்லே பாருங்க.
அது சரிங்க மிஸ்டர் ஐயாசாமி! எட்டு வயசிலேயே துள்ளி வர காளையை அடக்கின உங்களுக்கு, இந்த வயசிலே ஏதுதான் பிரமாதம்? மாயாண்டியோட காளையைப் பார்த்திருக்கீங்களா? முரட்டுக் காளையில்லே. பழகினது தான். வாங்களேன்.
இல்லே தம்பி! எனக்குக் கொஞ்சம் அவசரமான வேலை... சொன்னாக் கேளு. இன்னொரு நாளைக்கு...
சும்மா வாங்க சார். காளையைக் கண்ணாலே பாருங்க. உங்களைக் கண்டாலே அது வெட்டிப் பாம்பாயிடாது?
இப்படிப் போகலாம். இந்தப் பக்கமா...
அது தான் மாயாண்டியோட பாய்ச்சல் சிலம். சும்மா வாங்க. அது சண்டைக் காளைதான்னாலும் உங்ககிட்ட என்ன செஞ்சுக்க முடியும்!
பாத்தீங்களா சங்கிலியை? இதுதான் இந்தக் காளையோட பேரு. எத்தனை சாதுவா இருக்கு?
ம்... சரி. அந்தக் காலத்திலே நான் பாய்ச்சல் காளையை எப்படி அடக்கினேன்னு உங்களுக்குச் செய்து காட்டணும் அவ்வளவுதானே? ஓகே...!


மஞ்சி விரட்டுலே பாஞ்சு வர காளை முன்னாலே பயமில்லாமே அதை வழி மறிச்சுப் போய் நின்னேன். ரத்தச்சிவப் பேறிய அதன் வெறிக் கண்களையே பாத்துக்கிட்டு இப்படி 'ஸ்டைலா' நின்னேன்... அப்போ....
பசங்களா... டேய்... இந்தக் காளைக்கு என்ன வந்துட்டுது? பழகினகாளை, சாதுன்னீங்களே? ஏய்... ...ய்...
வாடா, சீக்கிரம். நாம கழுண் கிட வேண்டிய தருணம் இது...ம்...
ஏய் பாவு! இந்தச் சாங்கிலக்கு என்ன கோளாறு?... இதுக்கு என்ன வேணுமாம்....
ஐயோ... ஓ... காப்...ப்... பாத்... ...து...ங்...க...
ஹும்...ம்... மா...! ஐயை... ய்...யோ!
ஹ... ...ஹ...ஹா... ...ஹா....
பசங்களா மாயாண்டியோட மாடு ரொம்ப சாது, பழகினது ன்னீங்களே...
பழகினதுதான் சார். ஆனா அதுக்கு நான் கொடுத்த மாடு நீங்களும் கொஞ்சம் கூட பே புண்ணுக்குக் கட்டிங்களே கொடுத்திருந்தாலே போதும் உங்க பின்னாலியே வந்திருக்கும். ஜல்லிக்கட்டுக் காளை களைப் பத்தி எனக்குத் தெரியாது. அது கூடவே புண்ணு கொட்ட குணம் தெரியும்... ஹ... ஹ... ஹா!

தெரியுமா?

345. கடலின் மிக அதிகமான ஆழம் (a) 36,000 அடிகள், (b) 42,000 அடிகள், (c) 54,000 அடிகள். எது சரி?

346. இங்கிலாந்தின் தோட்டம் என்று புகழ் பெற்றது எந்த இடம்?

347. 'டைனமெட்' என்ற வெடிமருந்தைக் கண்டுபிடித்தது யார்?

348. 'ஆந்த்ராபாலஜி' என்றால் என்ன?

349. சாவானு (Savannah) என்றால் என்ன?

350. அல்பேனியாவின் தலைநகரம் எது?

351. மாபியா (Myopia) என்றால் என்ன?

352. நியூயார்க்கிலிருந்து பாரீஸுக்குத் தனியாக முதலில் விமானத்தில் பறந்தவர் யார்?

353. ஹேஸ்டிங்ஸ் என்ற நகர் இங்கிலாந்தில் எந்த மாகாணத்தில் உள்ளது?

354. இங்கிலாந்து ராணியான இரண்டாவது எலிஸபெத் பட்டத்துக்கு வந்த ஆண்டு எது?

355. 'டெர்பி' குதிரைப் பந்தயங்களில் ஓடும் குதிரைகளின் வயது என்ன தெரியுமா?

356. பக்கிங்ஹாம் அரண்மனையில் வசிப்பது யார்?

357. காண்டர்பெரி ஆர்ச் பிஷப் வசிக்கும் அரண்மனைக்கு என்ன பெயர் தெரியுமா?

358. வாடிகனில் வசிப்பவர் யார்?

359. கீழ்க்கண்டவை எந்த நாட்டில் உள்ளன? (அ) கலோசம் (ஆ) அல்கஸார் (இ) க்ரைஸ்லர் கட்டிடம்.

360. ஸெயிண்ட் பால் கதீட்ரலைக் கட்டியவர் யார்?

361. 'சாண்டா மரியா' என்ற கப்பலோடு தொடர்புடைய பிரபலமானவர் யார்?

362. தென் துருவத்தை முதலில் கண்டவர் யார்?

363. வட துருவத்துக்கு முதலில் சென்றவர் யார்?

364. யாரால் இவைகளுக்கு இந்தப் பெயர்கள் ஏற்பட்டன? 1. அமெரிக்கா. 2. டாஸ்மேனியா. 3. ஹட்ஸன் வளைகுடா.

தெரியுமே!

விடைகள்: 345. 36,000 அடிகள். 346. கெண்ட். 347. ஆல்பிரட் நோபெல். 348. உலகிலுள்ள பல்வேறு இன மக்களின் நாகரிகம் பற்றி ஆராய்வது. 349. பூமத்தியரேகைப் பிரதேசக் காடுகளுக்கும் பாலைவனத்துக்கும் இடைப்பட்ட நாட்டுக்குப் பெயர். 350. டிரானு. 351. கிட்டப் பார்வை (Short Sightedness). 352. சார்லஸ் லிண்ட்பெர்க். 353. ஸஸெக்ஸ் மாகாணத்தில். 354. 1942. 355. மூன்று. 356. எலிஸபெத் ராணி. 357. லாம்பெத் அரண்மனை. 358. போப்பாண்டவர். 359. (அ) இத்தாலி, (ஆ) ஸ்பெயின், (இ) அமெரிக்கா. 360. ஸர் கிறிஸ்டபர் ரென். 361. கிறிஸ்டபர் கொலம்பஸ். 362. ராஸ்ட் அமுட்ஸன். 363. ராபர்ட் இ. பியரி. 364. (1) அமெரிகோ வெஸ்பூசி, (2) அபெல் ஜான்ஸன் டாஸ்மான், (3) ஹென்றி ஹட்ஸன்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

வாழ்வே மென்மையின் உருவகம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்... நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.


தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-11-TAM



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆண்ட்வெர்ப்/ லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக்—இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.


ருசியானவை...அருமையானவை...பிரமாதமான
25 பைசாதான்!
PARLE
POPPINS
MIXED FRUITY SWEETS
25 Paise
புதிய பார்லே பாப்பின்ஸ்
பழரச மிட்டாய்கள்
எலுமிச்சை, ஆரஞ்சு, சாத்துக்குடி, அன்னாசி மற்றும்
ராஸ்ப்பெர்ரி ஆகிய ஐந்து பழரசச் சுவைகளில் ருசிமிக்க
13 மிட்டாய்கள்—குறைந்த விலை கொண்ட கையடக்கமான
பேக் ஒவ்வொன்றிலும்!
பாப்பின்ஸ் சுவையுங்கள்— பழரசச் சுவையை அனுபவியுங்கள்